BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# குறிஞ்சித்தேன் நாவல் காட்டும் படகர்களின் பால்உரிமைச் சடங்குகள்

முனைவர் கா. சந்தானலெட்சுமி
முதல்வர்(மு. கூ. பொ)& தமிழ்த் துறைத்தலைவர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சாத்தூர்,
மின்னஞ்சல்: lakshmisanthana617@gmail.com ORCID: 0009-0009-4031-9490

**ஆய்வுச் சுருக்கம்**

இயற்கைசார் வாழ்வியலைக் கொண்டு மரகதமலை(நீலகிரி பகுதி)யில் வாழும் படகர் இன மக்களின் சமூகச் சடங்குமுறைகள் பலவாகும். தங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்விலும் இத்தகைய சடங்குகளை பின்பற்றுவது அவர்களின் ஒழுகலாறாகவும் அமைகின்றது. படகர் பண்பாட்டின் தனி அடையாளமாகவும் சடங்குமுறைகள் விளங்குகின்றன. விளைநிலமும், பாலும், எருமையும் படகர் இன மக்களுக்கு மிகவும் புனிதமானவையாகும். அதனால் படகர் இன ஆண் சிறார்களுக்கு ஒரு குறிஞ்சி ஓராண்டு முடிந்தவுடன் பால் உரிமைச் சடங்கினை சிறப்பாக நிகழ்த்துகின்றனர். அச்சடங்குமுறை குறித்த விளக்கத்தினை இனவரைவியல் ஆய்வு அணுகு முறையிலும், சமூகவியல் ஆய்வு அணுகுமுறையிலும் இக்கட்டுரை காண விழைகின்றது. படகர் இன மக்களின் பால் உரிமைச்சடங்குமுறைகள், இன்றைய சூழலிலும், பொதுமக்கள் பின்பற்றும் சடங்கு முறைகளோடு பெரும்பாலும் பொருந்தியிருப்பதையும் தெளிவுப்படுத்தி விளக்குவதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகவும் அமைகின்றது. தொல் நாகரிகம் உடைய பழங்குடி மக்களின் நாகரிகமும் பண்பாடும் அவர்களின் சமூக கட்டமைப்பிற்கு உதவிய பாங்கினையும், இந்த ஆய்வுக்கட்டுரை எடுத்துரைக்க விழைகின்றது.

**குறிச் சொற்கள்**

குறிஞ்சிதேன், படகர்கள், ராஜம்கிருஷ்ணன், ஹோரணே, மடிஆடை, பால்மனை, உண்கலம், புரை, உள்மனை, வழிபாடு, குறிஞ்சி

## முன்னுரை

ராஜம்கிருஷ்ணன் களஆய்வு வாயிலாக படகர் இன மக்களின் வாழ்வியலை நேரில் கண்டு “குறிஞ்சித்தேன்”(1) எனும் நாவலைப்படைத்துள்ளார். இந்நாவல் அவருக்கான அடையாளம் மட்டுமன்றி படகர் இன மக்களின் அடையாளமாவும் இன்றுவரை மக்களின் வாசிப்புக்கு உள்ளாகின்றது. உணர்வுகள் எழுத்தாகிய விந்தையை குறிஞ்சித் தேன் படிக்கும் ஒவ்வொரு வாசகரும் உணர முடியும். படகர் இனமக்களின் வாழ்வியலில் பல்வேறு சடங்குமுறைகள் இடம் பெறுகின்றன. அவற்றில பால் உரிமைச் சடங்குமுறைகளை இனவரைவியல் ஆய்வு அணுகுமுறை மற்றும் சமூகவியல் ஆய்வு அணுகுமுறையில் இக் கட்டுரை காண விழைகின்றது.

## குறிஞ்சித்தேன் நாவலில் பழங்குடிமக்கள்

காலமாற்றம் நாகரிக மாற்றத்திற்குட்பட்டு மூன்று தலைமுறை கடந்த படகர் இன மக்களின் சமூகவாழ்வியலை குறிஞ்சித்தேன் நாவலில் ராஜம் கிருஷ்ணன் எடுத்துரைக்கிறார். சாகித்ய அகாடமி விருது பெற்ற முதல் பெண் நாவலாசிரியர் இவராவார். ராஜம் கிருஷ்ணன் (1925-அக்டோபர் 2014) தமிழில் நாவல்கள், சிறுகதைகள் எழுதிய எழுத்தாளர். இடதுசாரி பார்வையும், பெண்ணியப் பார்வையும் கொண்டிருந்தார். கோவா விடுதலைப் போர், ஊட்டி படகர்களின் வாழ்க்கை, தூத்துக்குடி உப்பளம் என மாறுபட்ட வாழ்க்கைச் சூழல்களில் எழுதியவர்.

இவரின் படைப்புகள் கள ஆய்வு செய்து எழுதப் படுவதால் தனித்துவம் வாய்ந்தவைகளாக

உள்ளன. போலி நாகரிகத்தின் இடையே பண்பாடுகாக்கும் படகரின் கலையும், பழைய பண்பாட்டிற்கும் புதியநாகரிகத்திற்கும் இடையே நடக்கும் போராட்டத்தினை இந்நாவலாசிரியர் ராஜம் கிருஷ்ணன் எடுத்துரைக்கிறார்.

**நீலகிரிவாழ் பழங்குடிமக்கள்**

மலைகள் காடுகள்சார்ந்த இயற்கை வாழ்விடங்களே பழங்குடி மக்களின் வாழ்விடங்களாக அமைகின்றன. இயற்கைக்கு இடையூறு செய்யாத பழங்குடிமக்களின் வாழ்வியலே இயற்கையோடு அவர்களை வாழ பழக்கியது எனலாம். நீலகிரி சார்ந்த மேற்குத்தொடர்ச்சி மலைப் பகுதிகள், எண்ணற்ற பழங்குடி மக்களின் வாழ்விடமாக இன்றுவரை தொடர்வதைக் காணமுடிகிறது. “சுமார் எழுநூறு ஆண்டுகளுக்குமுன் மைசூரிலிருந்து பண்டிப்பூர்க் காடுகளின் வழியே நீலகிரி மலையில் வந்து குடியேறியதாகச் சொல்லப்படும் படகமக்கள் சமூகத்தினரிடையே அவரவர் தொழிலுக்குத் தகுந்த படி சில பிரிவுகள் இருந்தன. ஹரிவர், உடையர், அதிகாரி கணக்கர், கடக்கர், கொரியர் என்ற பெயரில் முறையே குருமார்களாகவும் அதிகாரிகளாகவும் கணக்கர்களாகவும் இருந்தனர்”(3) என்றும் கூறுவர் என, ராஜம் கிருஷ்ணன் படகர்கள் நீலகிரியில் குடியேறிய வரலாற்றை, குறிஞ்சித்தேனில் பதிவு செய்துள்ளனார்.




**படகர்கள்**

படுகு என்ற மொழியைப் பேசுகின்றனர். எழுத்து வடிவம் இல்லாத படுகுமொழி தமிழும் கன்னடமும் சார்ந்த கலவை மொழியாக உள்ளது. 'படகர் "என்றால் வடக்கிலிருந்து வந்தவர்கள் என பொருள்படும். பழங்குடி மக்களின் இடப் பெயர்வே அவர்கள் இனக் குழுபெயராவதை ‘படகர்' என்றசொல் உணர்த்துகின்றது. படகர் இன மக்களோடு பல்வேறு இனக்குழுக்களும் நீலகிரியில் வாழ்வதை, “தொதவர்கள் மண்ணில் பாடுபடாதவர்கள். அவர்கள் மலையில் நாம் வந்து, குடியேறியிருக்கிறோம் என்ற காரணத்துக்காக, இன்னும் அறுவடைக்கு அறுவடை அவர்களுக்கும் தானியம் கொடுக்கிறோம். சட்டியும், பானையும், அரிவாளும், கொட்டும் ஈட்டியும் செய்து நமக்குத் தந்து நம் வாழ்வுக்கும் சாவுக்கும் வந்து, மேளமும் தாளமும் பாட்டும் அளிக்கும் கோத்தருக்கு நாம் தானியம் கொடுக்கிறோம்.”(4) காட்டுக்குறும்பரிடம் மந்திரம் மாயம் என்று பயந்து கொண்டு அவர்கள் கேட்டதெல்லாம் கொடுக்கிறோம் என்ற விங்கையாவின் கூற்று புலப்படுத்துகின்றது.

“இந்தியாவின் பழங்குடியினரின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரம் மற்றும் தனித்துவமான இசை குழு அடையாளங்கள். அவர்களின் வாய்மொழி மரபுகள் நம்பிக்கைகள் மற்றும் புராணங்கள் மூலம் இந்திய சமூக வரலாற்றினை உற்றுநோக்கி அறிந்துகொள்ள உதவுகின்றன.”(5) பழங்குடியின மக்களின் பண்பாட்டை அவர்களின் வாழ்வியல் சடங்குமுறைகளே தீர்மானிக்கின்றன.

**பழங்குடி மக்களின் கூங்குமுறைகள்**

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நீலக்குறிஞ்சி பூக்கும் மலைகளில் வண்டுகள், அந்தப் பருவத்தில் “பாறை இடுக்குகளிலும் மரக்கொம்புகளிலும் அடையடையாகத் தேன் வைக்குமாம். இதுவே குறிஞ்சித் தேன்”(6) என கால நிலை மாற்றத்தினைக் கூட இயற்கை வெளிப்பாடுக் கொண்டே பழங்குடி மக்கள் தீர்மானித்துள்ளனர். குறிஞ்சி, படகர்களின் காலக் கணக்கீட்டிற்கானக் குறியீடாகும்.

சமூகச் சடங்கு முறைகளே தனிமனித வாழ்வியலையும் ஒழுகலாறுகளையும் கட்டமைக்க உதவுகிறது. மனித இனத்தின் அடையாளமாகவும், பண்பாட்டின் உறைவிடமாகவும், சமூகச் சடங்கு முறைகளே உள்ளன. கால மாற்றத்தையும் பண்பாட்டு மாற்றத்தையும் அறிய உதவுவனவாக சமூகச்சடங்கு முறைகள் உள்ளன. படகர் இன மக்களின் சமூகச் சடங்கு முறைகள் இறை நம்பிக்கையோடும், இயற்கை வாழ்வியலோடும தொடர்பு கொண்டுள்ளன. “பண்பாட்டின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட அனைத்து வகையான நடத்தை முறைகளையும் சடங்கு (Ritval) என்பது குறிக்கிறது என்பார் மாரியாலீச். சடங்கு என்பது ஒருவகை நடத்தை முறையாகும்.”(7) படகர் இன மக்களின் வாழ்வியல் நடத்தைகள் ஒவ்வொன்றும் சடங்கு முறைகளோடு உயிர்ப்புடன் உறவாடும் தன்மை பெற்றனவாகும். இங்கு படகர் இன மக்களின் பால் உரிமைச்சடங்கு முறைகள் மட்டுமே ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் படுகின்றன.

**பால் உரிமைச் சடங்கு முறைகள்**

படகர் இன மக்களின் வாழ்விற்கு ஆதாரமாக விளங்குபவை அவர்களின் விளை நிலங்களும் எருமைகளும் பசுக்களுமே ஆகும். அவற்றயே வழிபட்டு வாழ்ந்தனர். “தோடர், கோத்தர் ஆகிய இரு இனத்தவரும் எருமையை வழிபடுகின்றனர். எனவே எருமையை எல்லா பழங்குடியின மக்களும் வழிபட்டுள்ளதை காணமுடிகின்றது.”(8) “நாகரிகத்தில் சிறந்து விளங்கும் மக்களைப் போன்றே, பழங்குடி மக்கள் தங்களுக்கென தனி தனியொழுக்கப் பாரம்பரியத்தையும் பழக்கவழக்கங்களையும் கொண்டு வாழ்கின்றனர்.”(9) அதற்கேற்பவே இவர்களின் பால் உரிமைச்சடங்கு முறைகளும் விளங்குகின்றன.

**பால் மனையும் பால் கறத்தல் நிகழ்வும்**

“ஒவ்வொரு வீட்டிலும் வெளிமனை என்ற பகுதி உண்டு. அதை அடுத்து உள்மனை என்ற பகுதியில் வாயிலுக்கு நேர் வளைவான வாயில், சமையற் பகுதியைப் பிரிக்கும். உள்மனையின் வலது ஓரத்தில், பூசை அறை சுவர் ஓரத்தில், பால்மனை அல்லது பூசை அறை சுவரோடு ஒட்டிய வளைவு வாயிலுடன் இணைந்திருக்கும்”(10) என்பதிலிருந்து பாலை எவ்வளவு புனிதமாக படகர் கருதினர் என்பது புலனாகும்.

“லிங்கையா வீடு திரும்பியதும் அன்றும் போர் சுடுநீரில் உடல் கழுவிக்கொண்டு”(11) பால் மனைக்குவந்து, மடி ஆடை உடுத்திக்கொண்டார். மடிஆடை என்பது உடுத்துபவரால் மட்டுமே தொடப் படவேண்டும். தனியே துவைத்து பிறர் யாரும் தொடாத வகையில் உயரத்தில் உலர்த்தி அங்கே தொங்கவிடப்படும். இன்றும் கோயில் வழிபாடு செய்யும் அந்தணர்கள், இம்முறைபோன்றே மடிஆடை உடுத்தி வழிபாடு செய்யவேண்டும் என்பதே ஆகம விதியாகும்.

படகர் இனமக்கள் பால் மனையையும், மடி ஆடை உடுத்தலையும் தங்கள் சடங்குமுறைகளின் ஒழுக்க விதிமுறைகளாக கருதினர். பால்மனைக்குள் செல்ல பெண்கள் யாருக்கும் அனுமதி இல்லை. பால்மனைக்குள் பால் கறந்து ஊற்றி திரும்பும்வரை பெண்கள் யாரும் அவ்விடம் ஏதிர்படக்கூடாது என்பது படகர்களின் நன்னடத்தை முறையாக இருந்தது. சடங்கு முறைகளும் இன வரைவியல் கூறுகளில் ஒன்றாகும். இனத்தை அடையாளப்படுத்துவது இனவரைவியலாகும். “இனவரைவியல் என்பது களப்பணியை அடிப்படையாகக் கொண்டது. கண்ணோட்ட இலக்கியவாதி, இனவரைவியலாளர் ஆகிய இருவருடைய களமாக அமையும் எதார்த்த உலகம் ஒன்று தான்.”(12) இன வரைவியல் காட்டும் எதார்த்தத்துக்கே இலக்கியத்தில் கற்பனை உணர்ச்சி கலந்த கலவையாக தரப்படுகிறது. இன்று கீழடி வெளிப்படுத்தும் அறிவியல் ஆய்வுகள் சங்க இலக்கியங்களோடு பொருந்திப் போவதை கண் கூடாக காணமுடிகின்றது. மனித வாழ்வியலை ஆவணப் படுத்துவதில் இலக்கியங்கள் முக்கிய பங்காற்றுகின்றன.

“இனவரைவியல் நாவல்கள் என்பன மானிடவியல் நூல்களில் காணப்படும் தொய்வினைச் சமன்செய்வனவாகக் கருதப்படுகின்றன. இனவரைவியல் நாவல்கள் மண்ணின் மரபு சார்ந்த மக்களுடைய குரல்கள் ஒலிப்பதற்கு வாய்ப்பளிக்கின்றன.”(13) இத்துகைய கூற்றுக்கு தக்கதொரு சான்றாக ராஜம் கிருஷ்ணனின் குறிஞ்சித்தேன் அமைகின்றது.

குறிஞ்சித்தேன் படகர் இன மக்களின் வாழ்வியலை எழுத்தோவியமாக்கியுள்ளது. “சூரியனின் பிரதிநிதியான விளக்குத் தெய்வத்துக்கு அஞ்சலி செய்துவிட்டு லிங்கையா பால்கறக்க புறப்பட்டு விட்டார்.”(14) என்பதிலிருந்து சூரியன் மறைந்த பின்னரே பால் கறத்தலை செய்துள்ளனர். சூரியன் அஸ்த்தமனபொழுதிலே மேய்ச்சலுக்குச்சென்ற எருமைகள் அதன்பின்னரே இருப்பிடத்திற்கு வரும், அதன் பிறகே, அவற்றை பால் கறத்தலுக்கு உட்படுத்தமுடியும் என்பதாலே, விளக்குவைத்த பின்பு படகர்கள் பால் கறந்துள்ளனர்.

அவர் எருமையின் மடியில் கை வைப்பதுதாக தெரியும் ‘ஹோணே’ என்ற மூங்கிற் பால்குழாயில் வெண்ணுரையாய் பால் பொங்கி வரும். பழைய காலத்தில் மாடுகள் கறக்க, வலிமை குறையாத ஆண் வேண்டுமென்று, வலதுதோள் பட்டையில் இரும்பை பழுக்ககாய்ச்சி சூடுபோடுவார்கள் என்று கோகியின் பாட்டி கதை சொல்லி அவன் கேட்டிருக்கிறான். வலியையும் வேதனையும் பொறுத்தால் தான் வலிமை பெறமுடியும் என்ற படகர்களின், மன நம்பிக்கையே அவர்களின் சடங்கு முறைகளுக்கும் அடிப்படையாக அமைந்தன. பால் கறக்கும் அந்த வேளை அவர்களுக்கு புனிதமான வேளை. இறைவனை வழிபாடு செய்கையில் கடைபிடிக்கும் அனைத்து சடங்கு செயல்களையும், பால் கறக்கும் வேளையில் படகர்கள் கடை பிடித்தனர் என்பதையே அவர்களின் பால் பறக்கும் நடத்தை முறைகளும், மனையும் எடுத்துரைக்கின்றன. கொட்டிலுக்குச்சென்று மூங்கிற் குழாய் வழிய வழிய கறந்த பாலைப் பெரிய பானையில் ஊற்றிக்கொண்டு, அவர் வரும் போது பெண்கள் எவரும் குறுக்கே வரமாட்டார்கள் பேசமாட்டார்கள். பால்மனையாகிய புனித அறைக்குள் அவர்கள் புகவும் மாட்டார்கள். அப்படிப் புனிதமாகக் கறந்த பாலை அடுப்பிலிட்டுக் காய்ச்ச மாட்டார்கள். பேதைப்பருவம் தாண்டிய பெண்கள் அந்நாட்களில் பாலை அருந்தவும் மாட்டார்கள். பால் மனையிலிருந்து பாலை வெளியே வைத்திருந்த கலத்தில் வீட்டிற்கு வேண்டிய பாலை ஊற்றிய பின்னர், மீதிப்பாலை புரைஊற்றி வைத்துவிட்டு மடி ஆடையை மற்றிக் கொள்வதோடு பால் கறத்தில நிகழ்வு முடிகிறது. அந்திம நேரத்தின் வழிபாட்டு முறையாகவே பால்கறத்தல் நிகழ்வு படகர் வாழ்வில் நிகழ்கின்றது.

பொதுமக்களும் புதுமனை புகுவிழாவில் புனிதமான பாலை முதல் முதலாக காய்ச்சி வீடு குடியேறுகின்றனர் . படகர்கள் பாலை காய்ச்சாமல் அருந்துகின்றனர். பொது மக்களும் பாலை காய்ச்சினாலும் கீழே பொங்கி வழியவும், பலைத் தீயவும் விடுவதில்லை. பால் திரிதல், தீய்தல் கூடாது என்ற நம்பிக்கை அனைவரிடமும் உள்ளது. மடி ஆடையை உடுத்தாவிட்டாலும் தனிஆடை உடுத்தியே ஆண்கள் பால் கறக்கின்றனர். ஆண்டாளும் திருப்பாவையில் "நெய்யுண்ணோம் பாலுண்ணோம் என்பதையே நோன்பின் நெறிமுறையாக(திருப்பாவை- 2) முன்வைக்கிறார்.”(15)

**பால் உரிமைச் சடங்குமுறைகள்**

புனிதமான பால் கறத்தலை முதன் முதலாக மேற்கொள்ளும் ஒவ்வொரு சிறாருக்கும் பால் உரிமைச் சடங்கு (ஒரு குறிஞ்சி பூத்து ஓராண்டு ஆனவர்) முறைகள் நிகழ்த்தப்படுகின்றன. பொதுமக்களின் பல்வேறு சடங்கு முறைகளும் அமைகின்றன.

அன்று திங்கட்கிழமை ரங்கன் பால் மனையில் புகுவதற்கான உரிமைச்சடங்கு அன்றுதான் நடைபெற இருந்தது. அதிகாலையிலே வீடுமெழுகி, சுத்தம் செய்து. சுடு நீர் வைத்து அனைவரும் நீராடினர். அண்ணன், தம்பி இருவரின் குடும்பமும் ஒன்று கூடின. கிழங்கும் கீரையும், மொச்சையும் சாமையும், திணையும் அரிசியும் வெல்லமும் அந்த சிறிய சமையற் கட்டில் நூறுபேர் விருந்துக்கு குவித்தனர். முதல் ஈற்றுக் கன்றுடன் மொழு மொழுவென்று நின்ற, காரி எருமையைக் குளிப்பாட்டி மணிகட்டி அலங்கரிப்பதில் ரங்கனின் தந்தை ஈடுபட்டிருந்தார். ரங்கன் மட்டும் புது உள்ளாடை, மேலாடை தரித்து நின்றான் என குறிஞ்சித்தேன் நாவல் பால்உரிமைச் சடங்கு முறையைத் தெளிவாக விளக்குகிறது. படகர்களின் அனைத்து சிறார்களுக்கும் பால் உரிமைச்சடங்கு முக்கியமானதாகின்றது. லிங்கையா சிறிதுபாலை கறந்த பின்பு மூங்கிற் குழாயை ரங்கனிடம்

தந்தார்கள். அவனால் இரண்டு பீர் மட்டுமே இழுக்க முடிந்தது. அதோடு பால்மனைக்குச்சென்று பெரியகலத்தில் பாலை ஊற்றும்போது, சிறிது பாலை ரங்கன் சிந்திவிட்டான். லிங்கையாவிற்கு நேரக்கூடாதது நேர்ந்துவிட்டது போல நெஞ்சு திடுக்கிட்டது என்பதிலிருந்து, படகர் இனமக்கள் தங்கள் சடங்குமுறைகளை உயிர்நாடியாகப் பின்பற்றிய ஒழுகலாறுகள் புலப்படுகின்றது. “பால் மனையிலிருந்து எடுத்துவந்த பால் சமையற் பகுதிக்கு வந்து எல்லாப் பண்டங்களிலும், பாலைத் தெளிக்கச்செய்தார். பிறகு, குழுமியிருந்தவர்களில் தந்தை மீதும் தாயார் மீதும் பெரியவர்கள் மீதும் பாலைத் தெளிக்கச் செய்தான்.”[16] குடமுழுக்கு நாளில் புனித நீரை எங்கும் தெளிப்பதைப் போலவே, பாலைக் கொண்டு படகர்கள் தம்மையும் தம்மிடத்தையும் புனிதப்படுத்தும் சடங்குமுறை படகர் இனத்தாரின் தனி அடையாளமாகும்.

**வாழ்த்துதலும் விருந்துமுறையும்**

“வற்றாத பால் வழங்க வளம் பெறுவாய் எருமைகளும் பசுவினங்களும் செழிக்கட்டும்”[17] என்று ஒவ்வொருவரும் ஆசிகள் வழங்கினர். பால் வளமும் பசுவளமும் படகர் வாழ்வின் முக்கிய வாழ்வாதாரமாகும். சடங்கு முடிந்தவுடன் பாலும், வெல்லமும், நெய்யும் சேர்ந்த பொங்கலை மனக்க மனக்க தையல் இலையில் முதியவளான பாட்டி, ரங்கனுக்கு படைத்தார் என்பதிலிருந்து மூத்தவர் சடங்கு முறையில் முன்னின்று நடத்தவேண்டியவர்களாக இருப்பதை உணர முடிகின்றது. இன்றும் மக்களிடையே இதுபோன்ற நிகழ்வே தொடர்கின்றது. பின்னர் பெரிய உண்கலன்களையும், தையல் இலைகளைக் கொண்டு வந்து, மாதி எல்லோருக்கும் வைத்து அமுது படைக்கலானாள். நாலைந்து பேர்களாக, குடும்பமாக இருப்பவர்கள் பெரிய உண்கலத்தில் உணவு உண்டனர். பிறர் தையல் இலையில் உணவருந்தினர். இத்தகைய பால் உரிமைச்சடங்கு படகர் இன மக்களின் சமூக வாழ்வியலை விளக்குகின்றது.

**முடிவுரை**

இயற்கைசார் வாழ்வியலே படகர் இனமக்களின் வாழ்வியல் என்பதை அவர்களின் சமூகச் சடங்கு முறைகள் வெளிப்படுத்துகின்றன. படகர் இன மக்களின் சடங்கு முறைகள் அனைத்து தரப்பு மக்களாலும் சிறிது மாற்றத்துடன் இன்றளவும் பின்பற்றப்படுவதை, இந்த ஆய்வுக் கட்டுரை உறுதி செய்கின்றது. சமூகச் சடங்கு முறைகளை படகர், தங்கள் உயிர் நாடியாகக் கருதியமையை இந்த ஆய்வு குறிஞ்சித்தேன் வாயிலாகத் தெளிவு படுத்துகின்றது.

**குறிப்புகள்**

1.தமிழ் விக்கிப்பீடியா 8 ஜனவரி 2026.

2.செந்தமிழ்ச் செல்வி, இராஜ்யம் கிருஷ்ணனின் புதினங்கள், 1.9.206

3. இராஜம் கிருஷ்ணன், குறிஞ்சித்தேன், ப.14

4.மேலது, ப.48

5.Sangya chavdhary, Tribal culture of India, P. 7

6.இராஜம் கிருஷ்ணன், மேலது, ப.3.

7.ஆ.தனஞ்செயன், தமிழில் இலக்கியமானிடவியல், ப. 75

8.கு.செந்தில், பழங்குடியினர் பண்பாடும் மருத்துவமும் மலர் 2 இதழ் 4 ஏப்ரல் 2018 சன்லாக்ஸ் பன்னாட்டு தமிழியல் ஆய்விதழ்.

9.ச.அகத்தியலிங்கம், தமிழக பழங்குடி மக்கள், ப.8

10.இராஜம் கிருஷ்ணன், மேலது, ப.27

11.மேலது, ப.27

12.சௌ. சுரேஷ்குமார், கீற்று24, 205

13.தனஞ்செயன், தமிழில் இலக்கிய மானிடவியல், ப. 8

14. இராஜம் கிருஷ்ணன், மேலது, ப. 28

15. மேலது, ப.28

16.மேலது, ப. 61

17. மேலது, ப. 62

**துணைநூற் பட்டியல்**

1. அகத்தியலிங்கம், ச.(பதிப்பாசிரியர்), தமிழக பழங்குடி மக்கள், ஆராய்ச்சி மானவர்கள் வெளியீடு, மொழியியல் துறை அண்ணாமலை நகர், 1972.
2. செந்தமிழ்ச் செல்வி, இராஜ்யம் கிருஷ்ணனின் புதினங்கள் தமிழ் இணையக் கல்விக்கழகம் 1.9.206

3. செந்தில், கு., பழங்குடியினர் பண்பாடும் மருத்துவமும் மலர் 2 இதழ் 4 ஏப்ரல் 2018 சன்லாக்ஸ் பன்னாட்டு தமிழியல் ஆய்விதழ்.
4. தமிழ் விக்கிப்பீடியா, 8 ஜனவரி 2026.
5. தனஞ்செயன், ஆ., தமிழில் இலக்கியமானிடவியல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2014
6. ராஜம் கிருஷ்ணன், குறிஞ்சித்தேன், ஸ்ரீசெண்பகா பதிப்பகம், சென்னை, 2020
7. Sangya chavdhary, Tribal culture of India, (editor), ITRHD Published by, The Indian trust for Rural heritage and Development(ITRL)< Newpelhi, 2019

*****